Regestered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசீய தினசரி National Tamil Daily

மலர் 7 (23-9-65) இதழ் 223

விசுவாவசு புரட்டாதி 7 ஜ: அவ் பிறை 26 வியாழக்கிழமை

## மாணவ ஆசிரியருக்கு பயிற்சி

பம்பலப்பிட்டி, புதன்
1964-ம் ஆண்டில் ஆசிரியர்களாகத் தெரிவுசெய்யப்பட்டவர்கள் 1967-ம் ஆண்டுக்கு முன்னர் ஆசிரிய பயிற்சிச் கலாசாலைகளில் பயிற்சி பெற வேண்டும். ஆசிரிய பயிற்சி பெருத மாணவ ஆசிரியர்கள்சேவையிலிருந்து வெளியேற்றப் படுவார்கள். ஆசிரிய பயிற்சி பெற்றவர்களையே ஆசிரிய சேவையில் வைத்திருக்க வேண்டுமென்பது கல்விமந்திரியின் உத்தேசமென்றும் இதுவே இந்த நிபந்தனைக்குக்காரணமென்றும் அறியப்படுகிறது. ஆசிரிய பயிற்சி பெருத ஆசிரியர்கள், நான்கு வருடப் பயிற்சி பெறுவதற்கு சகல வசதிகளும் செய்துகொடுக்கப்படுமாம். மாணவ ஆசிரியர் நான்கு வரும் ஆசிரிய பயிற்சி பெற வேண்டியது அவசியமெனக் கல்விமந்திரி கருதுவதாகவும் 1967ம் வருட முடிவுக்குள் ஆசிரியப் பயிற்சி பெறுவதற்கு ஆசிரியபயிற்சிக் கலாசாலைகளில் இடம்பெருதவர்கள் சேவையிலிருந்து விலகவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப் படுவார்களென்றும் அறிவிக்கப்படுகிறது.

**இன்று அதிகாலை 3-30 க்கு யுத்த நிறுத்தம்**

# இந்தோ-பாக். யுத்தம் முடிந்து விட்டது!

## இருநாடுகளும் சண்டையை நிறுத்த இணக்கம்

நியூயோர்க், செப். 22

**இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையேயான சண்டை இன்றேடு நின்று விட்டது. ஐ நா. பாதுகாப்பு சபையின் யுத்தநிறுத்த தீர்மானத்துக்கு பாகிஸ்நான் இணங்குவதாக இன்று பகல் 12-35க்கு, வெளி நாட்டு மந்திரி திரு. ஸுல்பிகார் அலிபூட்டோ சபைக்குமுன் தெரிவித்தார். யுத்த நிறுத்தத்துக்கு சம்மதிப்பதாக இந்தியா ஏற்கனவே சபைக்குத் தெரிவித்து விட்டது.**

பாகிஸ்தானின் வேண்டுகோளுக்கிணங்க இன்று காலை நடைபெற்ற அவசர பாதுகாப்பு சபைக் கூட்டத்தில், திரு. பூட்டோ பாகிஸ்தானின் சம்மதத்தைத் தெரிவிக்கும் ஜனதிபதி அயூப்கானின் செய்தியை வாசித்தார்.

சபைக்குமுன் பூட்டோ பேசுகையில் பாகிஸதான் இந்தத் தீர்மானத்தைக் கௌரவிக்கும் என்றும், யுத்த நிறுத்தம் ஏற்பட்டு குறிப்பிட்ட காலத்திற்குள் காஷ்மீர் பிரச்னையை ஐ. நா. தீர்க்காவிட்டால், ஐ. நா. ஸ்தாபனத்திலிருந்து பாகிஸதான் விலகிவிடும் என்றும் அவர் கூறினர்.

நாளைக் காலை 3-30 க்கு சண்டையை நிறுத்த பாகிஸதான் அவகாசம் கேட்டதற்கு சபை இணங்கியது.

### பாதுகாப்புசபை தீர்மானத்தில் பாகிஸ்தானுக்கு திருப்தியில்லை

—அயூப்

பாகிஸ்தான் கேட்டுக் கொண்டபடி நாளை காலை 3-30 வரை சண்டை நிறுத்தத்திற்கான காலவரம்பை நீடிக்க பாதுகாப்புச் சபை சம்மதித்தது இந்தநேரத்திலிருந்து இருபகுதி துருப்புக்களும் வாபஸாக ஆரம்பிக்கும்.

திரு. பூட்டோ சபையில் வாசித்த ஜனதிபதி ஆயூப் கானின் செய்தியில், சபையின் தீர்மானம்பாகிஸ்தானுக்குத் திருப்தியளிக்கவில்லை என்னும், ஆனல் சமாதானத்தின் நலனைக் கருதி தீர்மானத்தை ஏற்பதாயும் குறிப்பிடப்பட்டிருந்தது.

**காஷ்மீர்**

### பிரச்னையை தீர்க்காவிடில் ஐ. நா. விலிருந்து விலகுவோம்

—பூட்டோ அறிவிப்பு

யுத்தநிறுத்தத்தை பாகிஸ்தான் கௌரவிக்கும் என்றும், ஆனல் குறிப்பிட்ட காலத்துக்குள் காஷ்மீர் பிரச்னையை ஐ. நா. சபை தீர்க்காவிடில், அதிலிருந்து பாகிஸ்தான் விலகும் என்றும் வெளிநாட்டு மந்திரி பூட்டோ சபையில் அறிவித்தார்.

சமாதானத்தின் நலன் கருதி பாகிஸ்தான் தீர்மானத்தை ஏற்பதாக திரு. பூட்டோ அறிவித்ததைத் தொடர்ந்து ஐ. நா. வட்டாரங்கள் இந்த நன்முடிவுக்காக பாராட்டுத் தெரிவித்தனர்.

### இந்தியாவுக்கு சாதகம்

--சக்ளா

பாதுகாப்பு சபையின் தீர்மானம் இந்தியாவுக்குச் சாதகமாக இருப்பதாக நியுயோர்க்கிலிருந்து திரும்பும் வழியில் இந்தியப் பிரதிநிதி திரு. சக்ளா கூறினர். பாகிஸ்தானின் எந்த நிபந்தனையும் சபையினுல் ஏற்கப்படவில்லையென்றும் அவர் கூறினர்.

**சபையின் மகிழ்ச்சி**

பாகிஸ்தானின் யுத்த நிறுத்த முடிவு அறிவிக்கப் பட்டபின் பாதுகாப்பு சபைத்தலைவர் திரு கோல்ட் பர்க், சபையின் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொண்டார்.

**சாஸ்திரி வரவேற்பு**

பாகிஸ்தான், பாதுகாப்பு சபைத் தீர்மானத்துக்கு இணக்கம் தெரிவிப்பதைத் தாமதப்படுத்தியது. எனினும் யுத்தநிறுத்தத்திற்கு அது சம்மதித்தது மிக் நல்ல செய்திஎன இந்தியப் பிரதமர் திரு லால்பகதூர் சாஸ்திரி இன்று நிருபர்களிடம் குறிப்பிட்டார்.

**சீனவின் பின் உதவி**

பாகிஸ்தானின் நடவடிக்கைக்கு சீன பின்பலமாய்
(2-ம் பக்கம் பார்க்க)







**ஈழநாடு**

### சூருவளி மாத உதவித் திட்டம்

யாழ்ப்பாணம், புதன்
'ஈழநாடு' சூருவளி மாத உதவித் திட்டத்துக்கான தமது புரட்டாதி மாதப் பணமான ரூ.30ஐ திரு. சண்முக குமரேசன் காசோலை மூலம் அனுப்பியுள்ளார்.

### 'ஈழநாடு' சூருவளி நிதி வசூலும் வினியோகமும்

'ஈழநாடு' சூருவளி நிவாரண சபையினரால் 20-9-65ல் வழங்கப்பட்ட நிதி வருமாறு:

| | ரூபா | சதம் |
|---|---|---|
| மயிலிட்டியில் 47 குடும்பங்களுக்கு | 1920 | 00 |
| பலாலியில் 7 ,, | 365 | 00 |
| வல்வெட்டித்துறையில் 9 ,, | 380 | 00 |
| | 2665 | 00 |
| இதுவரை பணமாகவும், பொருட்களாகவும் வழங்கப்பட்டதொகை | 19662 | 23 |
| பொருட்களாகவும், பணமாகவும் சேர்ந்த முழுத் தொகை | 27578 | 87 |
| 'ஈழநாடு' ஊழியர்கள் நடாத்திய கதம்பநிகழ்ச்சியால் இதுவரை வசூலிக்கப்பட்ட தொகை | 1931 | 71 |
| சேர்ந்த முழுத் தொகை | 29510 | 58 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

''இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டால் அவைகளை இரு நாடுகளும் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும். அல்லது இரண்டு நாடுகளும்போரிட்டாவது தீர்த்துக் கொள்ள வேண்டும். வெளியார் குறுக்கீடு கூடாது.''

— மகாத்மாகாந்தி

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 389

யாழப்பாணம் விசுவாவசு ஆண்டு புரட்டாதிமீ 7 உ (23-9-65)

# யுத்த நிறுத்தம்

இந்தியாவும் பாகிஸ்தானும் சண்டையை நிறுத்த வேண்டுமென்ற ஐ. நா. பாதுகாப்புச் சபை உத்தரவை இரு நாடுகளும் ஏற்றுக்கொண்டுள்ளன. இன்று அதிகாலை 3-30க்கு சண்டை நிறுத்தம் அமுலுக்கு வருகிறது. பாதுகாப்புச் சபையின் தீர்மானப்படி இருதரப்புப் படைகளும் ஆகஸ்ட் 5-ம் திகதிக்கு முன்னிருந்த நிலைக்குத் திரும்ப வேண்டும். பாதுகாப்புச்சபையின் தீர்மானத்தை இந்தியா உடனடியாக ஏற்றுக் கொண்டு யுத்தத்தை நிறுத்துவதற்கு உடன்பாடு தெரிவித்திருந்தது. பாகிஸ்தான் உடனடியாகப் பதில் தெரிவிக்காததால் உலக சமாதானத்தை விரும்பும் நாடுகளும் சிறிது கலக்கமடைந்தன. சில மணி நேரத் தாமதத்தின் பின் பாகிஸ்தானும் யுத்தத்தை நிறுத்த ஒப்புக்கொண்டது வரவேற்கத்தக்கது; நிம்மதியளிப்பதுமாகும்.

இந்த யுத்தத்தினல் இந்தியாவுக்கோ பாகிஸ்தானுக்கோ எவ்வித இலாபமுமில்லை. இரு தரப்பிலும் பெரு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இருநாடுகளும் சமீபத்தில் விடுதலையடைந்த நாடுகள். பொருளாதார முன்னேற்றம் குறைந்த நாடுகள். இரு நாடுகளும் அடிபட்டுக் கொண்டதால் இரு நாடுகளின் முன்னேற்றமும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இதுவரையடைந்த முன்னேற்றமும் சீர்குலைந்து போயுள்ளது. இனி மீண்டும் பொருளாதார முன்னேற்றத்தைச் சீர்செய்வது சுலபமல்ல.

சண்டையை ஐ. நா. பாதுகாப்புச்சபைநிறுத்திவிட்டது. இதற்கு அமெரிக்கா, பிரிட்டன்போன்ற மேற்கத்திய வல்லரசுகளும் சோவியத் யூனியனும் ஒத்துழைப்பு அளித்தன. இத்துடன் பாதுகாப்புச்சபையினதும் மேற்கத்திய வல்லரசுகளினதும கடமை முடிந்துவிட்டதாகக்கருத முடியாது. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையிலுள்ள காஷ்மீர் மற்றும் அரசியல் பிரச்னைகளை, பாதுகாப்புச்சபையின் தீர்மானத்துக்கிணங்க, நிரந்தரமாகத் தீர்த்து இருநாடுகளுக்குமிடையில் நிரந்தர சமாதானம் நிலவச் செய்ய வழி காண வேண்டியது அவசியம். காஷ்மீர் பிரச்னைக்கே ஆதிகர்த்தாவாகிய பிரிட்டனுக்கு இதில் விசேஷ பொறுப்புஉண்டு. இரு நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்துக்கும் வசதி படைத்த வல்லரசுகளின் உதவியுடன் ஐ. நா. ஸ்தாபனம் உதவி புரிய வேண்டும்.

சண்டை நிறுத்த விபரமும் பாகிஸ்தான் கோரிய விளக்கமும் இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. சண்டைநிறுத்தம் மீண்டும்புதியசண்டைக்கு கிடைத்த இடைக்கால ஓய்வாகப் பயன்படாமல் நிரந்தர சமாதானத்துக்கு வழிவகுக்கக் கூடியதாக இருக்க வேண்டும். இந்தியாவும் பாகிஸ்தானும் பகைமையை மறந்து வெளியார் தலையீடு இல்லாமலே தமக்குள் சமாதானத்தை ஏற்படுத்த இனியாவது முன்வர வேண்டும். இந்தச் சண்டை இரு நாடுகளுக்கும் ஒரு பாடமாக அமையட்டும்.

## தமிழ் சர்வகலாசாலை வேண்டாமா?

தமிழ் சர்வகலாசாலை அமைப்பதால் தமிழர் பிரச்னை தீர்ந்துவிடுமோ என்று தேசியஅரசாங்கத்தில் அங்கம்வகிக்கும் ஒரேயொரு தமிழ்மந்திரியான திரு. திருச்செல்வம் ஒரு கூட்டத்தில் கூறியிருக்கிறார். இது தமிழ்பேசும் மக்களுக்கு வேதனையளிப்பதாகும்.

சர்வகலாசாலைகள் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் ஸ்தாபிக்க வேண்டும் என்று நீடாம் சர்வகலாசாலைக் கமிஷன் போதிய விசாரணையின் பின் சிபார்சுசெய்திருந்தது.

தமிழ்சர்வகலாசாலை வேண்டுமென்று இற்றைக்கு 9 வருடங்களுக்கு முன் தமிழ்ப் பகுதிகளில் கூக்குரல் எழுந்தது. தமிழ் சர்வகலாசாலை இயக்கமும் ஆரம்பிக்கப்பட்டது; நிதி சேர்க்கப்பட்டது. இதேசமயம் இந்து சர்வகலாசாலை வேண்டுமென்று மற்றொரு சாரார் குரல்எழுப்பினர். தமிழர் இயக்கங்கள் 'உலக்கை தேய்ந்து உளிப்பிடியாக'ப் போகும்முறையில் சர்வகலாசாலை இயக்கங்கள் எல்லாம் குன்றி வருகின்றன. மந்திரி திருச்செல்வம் 'நமோ' என்று முற்றுப்புள்ளி வைக்குமாப்போல் தமிழ் சர்வகலாசாலை தற்போது அவசியமில்லை என்று வேதவாக்காக அருளிச்செய்திருக்கிறார்.

இத்தகைய அரசியல்வாதிகளின் விளம்பல்கள் தமிழினத்திற்கும் கல்விமுன்னேற்றத்துக்கும் நல்லதல்ல. இலங்கைக்குஒருசர்வகலாசாலை போதுமென்றால் இலங்கைத் தலைவர்களுக்கு கல்விபற்றி விளங்காது என்றே யாரும் கூறுவர். அந்நிய ஆட்சி ஆதிக்ககாலத்தில், கலாசாலைகள் அவசியமல்லவென்றும் கலாசாலைப் பட்டதாரிகளுக்கு உத்தியோகம் கொடுக்கப்பணமில்லையென்றும் உத்தியோகப் பட்டதாரிகள் நாட்டுக்கு ஆபத்தான கூட்டத்தினர் என்றும் கருதினர். இது நாமறிந்த அடிமைக்கால புலம்பல். சுதந்திர இலங்கை, இதர சுதந்திர நாடுகளைப் பின்பற்றி எங்கள் ஜனத்தொகைக்கும் மாணவர்தொகைக்கும் ஏற்றஅளவு கலாசாலை வசதிகள் அளிக்க வேண்டும் என்பது எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டிய விஷயம்.

எந்த நாட்டின் முன்னேற்றத்துக்கும் பொருளாதாரவிருத்திக்கும் போதிய உயர்கல்வி கற்றவர்கள் அத்தியாவசியம் என்பதை எங்கள் அரசியல்வாதிகள் ஆட்சேபிக்கமுடியாது. இலங்கையிலே பட்டதாரிகள் போதாது; பள்ளிக்கூடத்துக்கு தொழில்விடுத்திக்கான விஞ்ஞானக்கல்விப் பட்டதாரிகள் முற்றாக இல்லை; வைத்தியப்பட்டதாரிகள் குறைவு; என்ஜினியர்கள் போதாது என்று தினசரி, பத்திரிகைகளில் செய்திகள் வெளிவருகின்றன. இச்சந்தர்ப்பத்தில் தமிழ்ப் பகுதிக்கு சர்வகலாசாலை வேண்டாமென்று கூறுவது அரசியல் ஞானமோ கல்விஞானமோ அல்ல.

இவ்விஷயத்தில் ஒரு காலத்தில் இலங்கைக்கு சர்வகலாசாலை வேண்டுமா அது கொழும்பிலா கண்டியிலா அமைக்கப்படவேண்டும்என்று வீண் தாமதம் செய்ததையும் அதனல் ஏற்பட்ட நஷ்டத்தையும் நன்கறிவோம். இதுபோலவே தமிழ்ப் பகுதியிலும் அரசியல்வாதிகளும், கட்சிவாதிகளும், மாகாண அபிமானிகளும் தமிழ்ச்சர்வகலாசாலை என்றும் இந்துச்சர்வகலாசாலை என்றும் யாழ்ப்பாணத்தில் அவை நிறுவப்படவேண்டும்; மட்டக்களப்பில் அல்லது திருக்கோணமலையில் அவை ஸ்தாபிக்கப்படவேண்டும் என்றும் பிரச்னைகளைக் கிளப்பி தமிழரின் கல்வி முன்னேற்றத்தை தடைசெய்க்கிறார்கள். ஒற்றுமையின்மையினலும் சர்ச்சைக்குரிய பிரச்னைகளைப்பெருக்குவதினலும் தமிழரின் முன்னேற்றம் பல துறைகளிலும் பாதிக்கப்படுகிறது. தற்போது இந்துச் சர்வகலாசாலை, தமிழ் சர்வகலாசாலை, சர்வகலாசாலைப் பிரிவு ஆகியவை அமைப்பது பற்றிய பிரச்னை அரசியல்வாதிகளினல்தான் பின்போடப்பட்டதென்பது தெளிவாகிவிட்டது. நிதிநெருக்கடி காரணமாக சர்வகலாசாலை அமைக்கும் விஷயத்தைப் பின்போடுவது அரசாங்கத்துக்குச் சாக்காக இருக்கக்கூடும். ஆனல் வெளிவெளியாக நிதிநெருக்கடிதான் காரணம் எனச் சொன்னல் அது முறையானதாக இருக்கும்.

தேசிய அரசாங்கம் நாட்டின் நலனுக்குச் செயலாற்றும் பணியில் முதன்மை கொடுக்க வேண்டியது கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் இரு சர்வகலாசாலைகளை ஸ்தாபிப்பதாகும். தேசியக் கல்விக்கும் கலாசாரத்திற்கும் நாட்டின் அபிவிருத்திக்கும் தொண்டாற்றுவதற்குத் திட்டம் வகுத்தால் இலங்கைக்கு இன்னும் இரண்டு கலாசாலைகள் அத்தியாவசியமென்பதை எவரும் ஒப்புக்கொள்வர். தேசிய அரசாங்கத்தின் கல்வி கலாசார அபிவிருத்தித் திட்டங்களை எதிர் பார்த்திருக்கிறார்கள்.

# பார்லிமென்ட் கட்டடத்தில் விவியன் - முகமது லடாய்

யாழ்ப்பாணம், புதன். ஜனப்பிரதிநிதிகள் சபை நேற்று இரவு ஒத்திவைக்கப்பட்ட பொழுது முன்னாள் பொரளை எம். பி.யும் தற்பொழுது ஒரு சிங்கள தினசரிக்கு நிருபராகக் கடமையாற்றுபவருமான திருமதி விவியன் குணவர்த்தன பத்திரிகைப்பகுதியிலிருந்து வெளியேறும் பொழுது 'இறைச்சிக் கடைக்காரன், இறைச்சிக் கடைக்காரன்' என்று கூக்குரலிட்டார்.

திருமதிகுணவர்த்தனபின்னர் தொழில் மந்திரி திரு. முகமது வெளியேறும் பாதைக்குச் சென்று சபையில் இருந்து வெளியில் வரும்படி சவால்விடுத்தார். இதற்குள் மந்திரி மறுபுறத்தால் இடத்தைவிட்டு அகன்றுவிட்டார்.

இதன் பின்னர் திருமதி விவியன்குணவர்த்தனராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவிடம் ஓடிச்சென்று ''இங்கே நீர் ஒரு உருத்திராட்சப் பூனைபோலிருந்து கொண்டு உங்கள் மந்திரிகளை தேவையற்ற முறையில் ஒவ்வாத பேச்சுக்கள் பேசவிடுகின்றீர்கள்'' என்று அதட்டினர்.

ஒத்திவைப்புப் பிரேரணையின் போது மந்திரி திரு. முகமது பேசிய பேச்சிற்கு திருமதி குணவர்த்தனசினங்கொண்டுள்ளார் என்பதை அப்பொழுது தான் அங்குள்ள அங்கத்தவர்கள் உணரமுடிந்தது.

ஐக்கிய அரபுக் குடியரசு ஸ்தானிகர் தன்னுடன் போட்டியிட்டவருக்கு பண உதவி புரிந்துள்ளார் என்று மந்திரி திரு. முகமது சபையில் கூறியதைத் தொடர்ந்தே இச்சம்பவம் நிகழ்ந்தது. தேர்தலில் ஈடுபடுவதற்கு தன்னிடம் போதிய பணம் உண்டென்றும் அதற்காக தான் எவரிடமிருந்தும் பணம் எதிர்பார்க்கவேண்டியதில்லை என்றும் திருமதி விவியன் குணவர்த்தன ராஜாங்க மந்திரியிடம் கூறியுள்ளார்.

இச்சம்பவத்தைக் கண்டு ஆச்சரியமும் திகிலும் அடைந்த திரு ஜெயவர்த்தன இவ்விஷயத்தை தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரும்படி கூறினர்.

வெளியே சென்றுகொண்டிருந்த திருமதி குணவர்த்தன ''நீங்கள் அமெரிக்கர்களுக்கு கையாட்களாக இருக்க விரும்பினல் இருங்கள். அதைப்பற்றி அக்கறை இல்லை. ஆனல் கீழ்த்தரமான குற்றச்சாட்டுகளை வெளிநாட்டு ஸ்தானிகர்களுக்கெதிராகச் சுமத்தாதீர்கள்'' என்று குறிப்பிட்டார்.

இதன்பின்னர் திருமதி பண்டாரநாயக்கா திருமதி குணவர்த்தனவை பொறுமையாக வீடுசெல்லும்படி ஆலோசனை கூறினர்.

இச்சம்பவம்யாவும் ஜனப்பிரதிநிதிகள் சபைக்கு வெளியே நிகழ்ந்தது.

# 'இறந்தவரின் தலையில் எதிரி பொல்லால் அடித்தார்'

## வவனியா கொலை வழக்கு விசாரணை

யாழ்ப்பாணம், வியா. சம்பவம் நடந்த தினம் நள்ளிரவில் காலஞ்சென்றவரும் நானும் படுத்திருந்த போது எதிரியின் சகோதரர் வந்து கூப்பிட்டார். காலஞ்சென்ற பண்டா எழுந்து சென்றபோது எதிரி பொல்லினல் தலையில் தாக்கினர்.

வவனியா கொலைவழக்கு நேற்றுக்காலை நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா கியூ. ஸி. முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சாட்சியமளித்த சந்திரசேகரம் மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கு 64-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 13-ம் திகதி வவனியா பகுதியில் ஹெரத் முடியான்சே பண்டாவைக் கொலை செய்ததாக ராமசாமி சின்னக்கண்டு என்பவர்மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிக்காக அரசாங்கத்தால் வழக்கறிஞர் திரு. எஸ். பாலகுமார் நியமிக்கப்பட்டிருந்தார்.

என். சந்திரசேகரம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

இறந்தவரை எனக்குத் தெரியும். அவர் 60-ம் ஆண்டும், 64-ம் ஆண்டும் எனது டிராக்டர் சாரதியாக இருந்தார். சம்பவ தினத்திற்கு முதல்நாள் இறந்தவரை டிராக்டர் திருத்த பரந்தனுக்கு அனுப்பினேன். சம்பவம் நடந்ததினம் இரவு 11 மணிக்கு டிராக்டரைக் கொண்டுவந்தார்.

நாங்கள் படுத்திருந்த பொழுது நள்ளிரவு எதிரியின் சகோதரர் கூப்பிட்டார். இறந்தவர் எழுந்து சென்றார். நானும் பின்னல் சென்றேன். எதிரி அவ்விடத்தில் நின்றார். இறந்தவரின் தலையில் எதிரி பொல்லினல் அடித்தார். உடனே பண்டா நிலத்தில் விழுந்தார். டிராக்டர்மூலம் அவரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றோம். பொலிஸாருக்கும் இது பற்றி வாக்குமூலம் அளித்தேன்.

டாக்டர் அமரசிங்கா சாட்சியமளித்தார்.

## புதிதாக விசாரணை

யாழ்ப்பாணம், வியா. வவனியா கொலைவழக்கில், நீதிமன்றத்தில் கூறக்கூடாதவற்றை சாட்சி கூறியபடியால் நீதியரசர் விசாரணையை நிறுத்தி, ஜூரிசபையைக் கலைத்து புதிய ஜூரிசபையினர் முன்னிலையில் மீண்டும் இவ்வழக்கு விசாரணைசெய்யப்படவேண்டுமென உத்தரவிட்டார்.

## நவராத்திரி விழா

யாழ்ப்பாணம், வியாழன். வண்ணை நாவலர் வித்தியாசாலையில் இம்மாதம் 25-ம் திகதி தொடக்கம் நவராத்திரி விழா சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்விழாவில் பல பெரியார்களின் சொற்பொழிவுகளும், விசேஷ பூசை ஆராதனையும் நடைபெறும். நவ நவராத்திரி துதிப்பாடல் நூல் விழாவில் விநியோகிக்கப்படும்.

## இந்தோ....

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

இருக்கிறதென்றும், சீனர்கள் இந்தியாவைத் தாக்கினல் உலக யுத்தம்ஏற்படும் என்றும் அராபியநாடுகள் அனைத்தும் இந்தியாவுக்கு ஆதரவாக இருப்பதாயும் திரு. சக்ளா பேரூட் விமான நிலையத்தில் கூறினர்.

## 100 ஐ. நா. பார்வையாளர்

யுத்த நிறுத்தத்தை அமுல் செய்யவும் ஆகஸ்ட் 5ம் திகதிக்கு முந்திய நிலைகளுக்கு இருபகுதித் துருப்புக்களும் வாபஸாவதைக் கண்காணிக்கவும் 100 ஐ. நா. ராணுவ மேற்பார்வையாளர்களும், மற்றும் தேவையான அதிகாரிகளும், 60 சிவில் அதிகாரிகளும் அனுப்பப்படுவார்கள் என யுதாண்ட் கூறினர்.

சுமார் 3 மாதங்கள் இவர்கள் அலுவலில் ஈடுபடவேண்டியிருக்குமென்றும் இதற்கு மொத்தம் 15 லட்சம் டாலர் செலவாகுமென்றும் யுதாண்ட் அறிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனப் பகுதிக்குள் ராணுவ நிலைகளை இந்தியா கலைத்துவிட்டதாக பீகிங் அறிவிப்பு

## ஆனல் இது வெறும் கற்பனை என டில்லி மறுப்பு

## சீனர் சுட்டதில் 3 இந்தியரை காணவில்லை

### "ஆக்கிரமிப்பு நடவடிக்கையை நிறுத்துக" பீகிங் அரசாங்கத்துக்கு டில்லி குறிப்பு

புதுடில்லி, செப். 22

சிக்கிம், லடாக் எல்லைகளில் சீனத்துருப்புக்கள் மேற்கொண்டிருக்கும் வலுத்தாக்குதல் நடவடிக்கைகளை இந்தியா ஆட்சேபித்திருப்பதுடன், இவற்றை உடன் நிறுத்துமாறும் கேட்டிருக்கிறது.

இந்தியத் துருப்புக்கள் சீனப்பகுதிக்குள் ஊடுருவியிருப்பதாகக் கூறப்படுவது முற்றும் பொய் என்றும், சீனவின் முன்கூட்டிய திட்டமிட்ட நடவடிக்கைதான் இது என்றும் அது சீனவுக்கு இன்று அனுப்பியுள்ள குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சிக்கிம், லடாக்கில் வடஎல்லை நெடுகிலும் முன்வந்து சீனர் சுடுகிறார்கள் என்றும், மேற்குப்பகுதியில் ராணுவவிலக்கப் பிரதேசத்தில் 20 கிலோ மீட்டர்தூரம் வரைவந்து, இந்தியப் பகுதியான டும்சேலியில் சுடுகிறார்கள் என்றும், உடன் இதை நிறுத்துமாறும் இந்தியா கேட்டிருக்கிறது.

## இராணுவ நிலைகள் அகற்றப்பட்டனவாம்

இதற்கிடையில் சிக்கிம் எல்லைக்கப்பால் சீனப்பகுதிக்குள் அமைக்கப்பட்டிருந்த இந்திய ராணுவ நிலைகளில் பெரும்பாலானவற்றை இந்தியா கலைத்துவிட்டதென்றும், சீனவின் கடும் எச்சரிக்கையைத் தொடர்ந்து அவசரமவசரமாக இந்தியர் இவற்றைக் கலைத்துவிட்டு சிக்கிம் பகுதிக்குள் வாபஸ்பெற்றார்களென்றும் பீகிங் ரேடியோ இன்று ஒலிபரப்பியது.

ஆனல் இதுவெறும் கற்பனையென்றும், சீனப்பகுதிக்குள் இந்திய நிலைகள் இருந்தால்தான் அவற்றைக் கலைக்கமுடியுமேயொழிய, இல்லாத ஒன்றை இருப்பதாகக் காட்டுவது ஆச்சரியம் என்றும் பாரத அதிகாரி ஒருவர் கூறினர். சீனப்பகுதிக்குள் தாங்கள் செல்லவேண்டிய அவசியம் இல்லை என்றும், ஏதோ நிலைகளைக் கலைத்ததாகக் கூறுவது, சீனர்கள் கலைத்த எதையோதான் குறிப்பிடுமென்றும் அவர் தொடர்ந்து கூறினர்.

இதற்கிடையில் சிக்கிமிலும், லடாக்கிலும் பல இடங்களில் சீனத்துருப்புக்களின் நடமாட்டம் தென்பட்டு வருகிறது.

அதேசமயம், இந்தியாவுக்கு சீன விடுத்திருக்கும் இறுதி எச்சரிக்கை இன்று நள்ளிரவுடன் முடிவடைகிறது.

டும்சேலியில் சீனர்கள் இந்தியப் பொலிஸ் கோஷ்டி ஒன்றின்மீது சுட்டதில், 3 இந்தியரைக் காணவில்லை என்று அறிவிக்கப்பட்டது. டும்சேலிபகுதி, சீன எல்லைக்குள் இருப்பதாக சீன கூறுவதை இந்தியா மறுத்து, அது இந்திய எல்லைக்குள் இருப்பதாகக் கூறுகிறது.

சிக்கிம்—திபேத் எல்லையில் 14500 அடி உயரமான நதூலா கணவாய்ப் பகுதிக்குள் சீனர்கள் நேற்று ஊடுருவி வந்து, இந்தியர்கள் துப்பாக்கிப்பிரயோகம் செய்தபின் விலகிச் சென்றார்கள். சம்பி பள்ளத்தாக்கில் எல்லைக்கு மிக அருகிலும் சோலா, சுவீலா ஆகிய இடங்களிலும் சீனர்கள் காணப்படுகிறார்கள்.

# "யுத்தத்தை நாங்கள் ஆரம்பிக்க வில்லை அவர்கள்தான் தாக்கினர்கள்"

## லண்டனில் பூட்டோ பேட்டி

லண்டன், செப். 22

யுத்த நிறுத்த தீர்மானம் பற்றி தாம் பாதுகாப்பு சபையிடம் விளக்கம் கோரப் போவதாய் பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி பூட்டோ லண்டனில் அறிவித்தார்.

யுத்த நிறுத்தத்திற்குப் பின் காஷ்மீரின் அரசியல் பிரச்னைகளைத் தீர்ப்பது சம்பந்தமாகவும் தான் விளக்கம் கோரப்போவதாய் அவர் கூறினர்.

பாகிஸ்தானின் வேண்டுகோளுக்கிணங்க ஐ. நா. காதுகாப்புச்சபை இன்று காலை அவசரக் கூட்டம் நடத்தியது.

"இந்த யுத்தத்தை நாங்கள் ஆரம்பிக்கவில்லை. இந்தியாவின் தாக்குதலுக்கும் ஆக்கிரமிப்புக்கும் நாங்கள் உள்ளாகியிருக்கிறோம்" என்றார் பூட்டோ.

காஷ்மீர் பிரச்னை தீர்க்கப்படாவிட்டால் உலகில் போபாயம் ஏற்படும் என ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் கூறியிருக்கிறார்.

பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி பூட்டோ நியூயோர்க்கில் ரஷ்ய வெளிநாட்டு மந்திரி திரு. குரோமிகோவைச் சந்தித்துப் பேசவிருக்கிறார் பின்பாதுகாப்பு சபைத் தலைவரான அமெரிக்கப் பிரதிநிதி திரு. கோல்ட்பர்க்கையும் அவர் சந்திப்பார்.

இதற்கிடையில் இந்தோ-பாகிஸ்தான் குழப்படியில் தலையிடுவதாக சீன, ரஷ்யா மீது குற்றஞ்சாட்டியிருக்கிறது.

# பாகிஸ்தானில் மேற்குநாட்டு காரியாலயங்கள் எரிக்கப்பட்டன

## சூ-என்-லாயின் படத்துடன் மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

புதுடில்லி, செப். 22

ஜோத்பூரில் இன்று ஜெயில் ஆஸ்பத்திரி ஒன்றை பாகிஸ்தானிய விமானங்கள் தாக்கியது காரணமாக 30 பேர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அதே சமயம், கட்ச்-இந்து எல்லையில் பாகிஸ்தான் ரடார் நிலையங்களை இந்திய கான்பரா விமானங்கள் தாக்கி அழித்ததாக மேலும் அறிவிக்கப்பட்டது.

ஸியால் கோட்டில் பாகிஸ்தான் நிலைகள் இரண்டை இந்தியத் துருப்புக்கள் நேற்றுக் கைப்பற்றின.

நேற்று மாலை பாகிஸ்தானிய சேபர் ஜெட் விமானங்கள் பிரயோகித்த 18 ராக்கெட்டுகள் பாகிஸ்தானின் முன்னணி நிலையிலேயே விழுந்து சேதத்தை ஏற்படுத்தியதாக அறிவிக்கப்பட்டது.

### பாக். ஒப்புதல்

தாம் இந்தியா மீது நேபாம் குண்டுகளைப் பிரயோகித்ததாகப் பாகிஸ்தான் இப்போது ஒப்புக்கொண்டிருக்கிறது.

சீனவும், பாகிஸ்தானும் இந்தியாவுக்கெதிராகச் சதி செய்கின்றன என்பது இந்தியாவுக்கு நிச்சயம் தெரியும் என கல்வி மந்திரி திரு. சக்ளா லண்டனில் நிருபர்களிடம் கூறினர்.

நேற்று அவர் பம்பாய் திரும்பி வந்து சேர்ந்தார். பாதுகாப்புச்சபை தீர்மானம் தெளிவானது என்றும், இதற்கு விளக்கம் கோர பூட்டோ நியூயோர்க் செல்லவேண்டிய அவசியமில்லை என்றும் திரு. சக்ளா மேலும் கூறினர்.

### ஆர்ப்பாட்டங்கள்

இதற்கிடையில் பாகிஸ்தானில் கராச்சி, லாகூர் ஆகிய நகரங்களில் மேற்கு நாடுகளுக்கு விரோதமான ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் ஆகியவற்றுக்கு அங்கு தடைவிதிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆர்ப்பாட்டங்கள் குறித்து அமெரிக்கா பாகிஸ்தானிடம் ஆட்சேபனை தெரிவித்துக்கொண்டிருக்கிறது.

கராச்சியிலுள்ள அமெரிக்க, பிரிட்டிஷ் தகவல் நிலையங்களையும், பிரிட்டிஷ், அமெரிக்க, டச்சு விமானக் கம்பெனி காரியாலயங்களையும் ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்கள் எரித்துவிட்டார்கள். ஐ. நா. காரியாலயத்திலிருந்த கொடியை அவர்கள் கிழித்தெறிந்தனர். கனடா தூதராலயத்திலிருந்த கொடியையும் அவர்கள் கீழிறக்கினர்கள்.

### சூ படத்தை தூக்கினர்

அமெரிக்கா, பிரிட்டன், ஐ. நா. இந்தியா, ரஷ்யா, ஆகிய நாடுகளுக்கு விரோதமான கோஷங்களை மாணவர்கள் எழுப்பினர். சீனப் பிரதமர் சூ ன் லாயின் படத்தைத் தாங்கியவண்ணம், "எங்களுக்கு யுத்தம் வேண்டும்" எனக் கோஷமிட்டார்கள்.

லாகூரில் அமெரிக்க தூதராலயத்தில் கற்கள் வீசப்பட்டன. அமெரிக்க தூத

(4-ம் பக்கம் பார்க்க)

## பாக். உதவி குழு கூட்டம்: மீண்டும் ஒத்திவைப்பு

வாஷிங்டன், செப். 22

பாகிஸ்தானுக்கு நிதி உதவி அளிக்கும் கூட்டம் மீண்டும் ஒத்திப்போடப்பட்டிருப்பதாக உலகவங்கி அறிவித்தது. இந்திய உபகண்டத்தில் ஏற்பட்டிருக்கும் நிலைமையே இதற்குக் காரணம் என்றும், நிலைமை சீரானபின் கூட்டம் நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

இக்கூட்டம் பாகிஸ்தானுக்கு சுமார் 250 கோடி ரூபாய் உதவிஅளிக்கவிருந்தது.

# பாகிஸ்தான் கடற்படை கராச்சிக்கு விரைந்தது

புதுடில்லி, செப். 22

இந்திய துறைமுகங்களைத் தாக்குவதற்கு தக்கவாய்ப்புக்காக குஜராத் கடற்கரைக் கப்பால் காத்திருந்த பாகிஸ்தான்கடற்படை, இந்தியப் போர்க்கப்பல்கள் வருவதை யறிந்து கராச்சிக்கு விரைந்ததாக அறிவிக்கப்படுகிறது.

இருவார காலமாக அரபிக் கடலில் ஒரு குருய்ஸரும், 5 நாசகாரிகளும், ஒரு சப்மரீனும், 2 போர்க் கப்பல்களும் உட்பட அநேகமாக பாகிஸ்தான் கடன்படை பூராவும் சஞ்சாரம் செய்து கொண்டிருந்ததாயும், குஜராத் கடற்கரைக்கு 100 மைல்களுக்கப்பால் இந்திய கடற்படை விமானம் இதைக் கண்டதைத் தொடர்ந்து இந்தியப் போர்க் கப்பல்கள் விரைந்தன என்றும் கூறப்பட்டது. பாகிஸ்தான் வேவு கப்பல்கள் எச்சரிக்கவே, பாகிஸ்தான் கடற்படைக் கப்பல்கள் கராச்சியை நோக்கி ஓட்டம் பிடித்தனவாம்.

## பன்பானி தலைவரானர்

நியூயோர்க், செப். 22

ஐ. நா. 20-வது மகாசபைக் கூட்டம் ஆரம்பமானபொழுது, இத்தாலிய வெளிநாட்டுமந்திரி திரு. பன்பானி தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

## "பாகுபாடு கிடையாது"

பெர்லின், செப். 22

ஐ. நா. சங்கங்களின் உலக சம்மேளனத்தின் உப தலைவர் திரு. மாமட்டா ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் இரு வாரங்கள் சுற்றுப் பிரயாணம் செய்தார். அவர் கானவைச் சேர்ந்தவர்.

அவர் பத்திரிகைகளுக்கு அளித்த ஒரு பேட்டியில், சந்தோஷமாகவும், ஆரோக்கியத்துடனும் இருக்கும் ஜெர்மன் சிறுவர், சிறுமியர் தன்னைப்பெரிதும்கவர்ந்தனரென்றும், அவர்களிடம் இனப்பாகுபாடு அடியோடு கிடையாதென்றும், சர்வதேச நட்பு அவர்களுக்குப் போதிக்கப்படுகிறதென்றும் தெரிவித்தார்.

## 70,000 அகதிகளுக்கு புதுவாழ்வு

பெர்லின், செப். 22

1961 ஆகஸ்ட் 13ந்திகதி முதல் இதுவரை மேற்கு ஜெர்மனியிலிருந்தும், மேற்கு பெர்லினிலிருந்தும் சுமார் 70,000 பேர் புகலிடம் தேடி ஜெர்மன் ஜனநாயகக்குடியரசுக்கு வந்துள்ளனர். அவர்கள் தனி விடுதிகளில் நிறுத்தப்பட்டு, சோஷலிச சமுதாயத்தில் எதிர்கால வாழ்வு பற்றி போதிய பயிற்சி [illegible] படுகின்றனர். பின்னர். நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள தொழிற்சாலைகளிலும், விவசாய [illegible] வேலை தேடிக் கொடுக்கப்படுகிறது.

## நிக்ருமா தூது அனுப்பினர்

பெர்லின், செப். 22

கான ஜனதிபதி டாக்டர் நிக்ருமாவின் விசேட தூதர் திரு. புடு-அக்யா, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுக்கு விஜயஞ்செய்து 6 நாட்கள் இங்கு தங்கியிருந்தார். அவர் வெளிவிவகார மந்திரி திரு. ஒட்டோ வின்ஸருடன் பேச்சுவார்த்தைகள் நடத்தினர். ஜெர்மன்-தெ. கி. ஆசிய சங்கத்தின் அழைப்பின்மீது இலங்கையிலிருந்து திரு. ஜயா பத்திரானவும், வண. ரக்குபொல ஆனந்த தேரோவும் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுக்கு விஜயஞ்செய்துள்ளனர். விவசாயத்துறையிலும், நிர்வாகத்துறையிலும் இந்த நாடு பெற்றுள்ள முன்னேற்றத்தை அறிய அவர்கள் ஆவல்கொண்டுள்ளனர்.

## உயிரிழந்த மறக்குலத்தோர்

புதுடில்லி, செப். 22

பாகிஸ்தான் படையெடுப்பை எதிர்த்து தற்போது நடக்கும் சண்டையில் உயிரிழந்த இந்திய ராணுவத்தினரின் முதல் ஜாபிதா வெளியாகியிருக்கிறது.

இதில் நடேசன் கல்யாணம், ராஜகோபால், முருகப்பன், சூரமணி ஆகிய தமிழர்களின் பெயர்களும் இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானக் கல்வியின் தரம் வடக்கில் உயர்ந்துள்ளது

## காலியில் உள்நாட்டமைச்சர் பேச்சு

காலி, புதன்

வடக்கு கிழக்கு, மாகாணத்தில் விஞ்ஞானக் கல்வியின தரம் மிகவும் உயர்ந்த தரத்திலிருக்கும் அதேநேரத்தில் தென் மாகாணத்தில் விஞ்ஞானக் கல்வியின் தரம் மிகவும் குறைந்த நிலையில் உள்ளது' என உள்நாட்டுமந்திரி டாக்டர் டபிள்யு. தகநாயக்கா தென் மாகாணத்தில் கல்வித்தரம் பற்றி ஆராயவென நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இக்கூட்டம் வித்தியலோகா வித்தியாலயத்தில் வண. கொணபினுவல புனசார நாயக்க தேரோ தலைமையில் நடைபெற்றது. 'தென்மாகாண கல்விச் சேவைச் சங்கம்' என்றபெயரில் புதிதாக சங்கம் ஒன்றும் நிறுவப்பட்டது.

அமைச்சர் திரு. தகநாயக்கா பேசுகையில், றோயல் கல்லூரிபோன்ற பாடசாலைகளில் ஐந்தாம் வகுப்புக்குக்கூட பட்டதாரிகளே கல்வி பயிற்றுகின்றுர்கள் என்றும் ஆனுல் தென் மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் ஜி. ஸி. ஈ. வகுப்புக்களில் பயிற்றுவிக்கக்கூட பட்டதாரிகள் இல்லைஎனவும் இதற்குகல்வி அதிகாரிகள் மீதே குற்றம் சுமத்தவேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளரான டாக்டர் ஸி. தகநாயக்கா பேசுகையில் பல்கலைக்கழகக்கல்விக்கு நல்ல ஆங்கில அறிவு அவசியம் எனவும் இலங்கைப் பல்கலைக்கழகம் உலகிலே சிறந்த பல்கலைக் கழகங்களில் ஒன்றெனவும் குறிப்பிட்டார். சகல போதனுபீடங்களையும் நவீன வசதிகளையும் கொண்ட பல்கலைக் கழகம் மட்டுமே தென் மாகாணத்துக்குத் தேவை எனவும் பல்கலைக்கழக விடுதி எதுவும் இங்கு தேவையில்லைஎனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

டாக்டர் ஜெயதேவா திலகசிறி பேசுகையில் "ஆங்கிலத்தின் அவசியம்பற்றி நாம் பேசும்போது அரசியல் கண்கொண்டு அதை நோக்கக்கூடாது. அரசியலுக்கு அப்பால் வைத்து எண்ணக்கூடிய அளவுக்கு ஆங்கிலம் முக்கியத்துவம் வாய்ந்தது. குறிப்பாக விஞ்ஞான, வைத்திய பொறியியல் கல்விக்கு ஆங்கில அறிவு மிகவும் அத்தியாவசியமானதாகும்'' எனக் குறிப்பிட்டார்.

டாக்டர் எம். பி. ஆரியபாலா பேசுகையில், வடக்கு மாகாணத்தில் விஞ்ஞானக் கல்வியின் தரம் உயர்ந்தநிலையில் இருப்பதால் பல்கலைக்கழகத்திலுள்ள விஞ்ஞான பட்டதாரி மாணவர்களில் 50 சத விகிதத்தினர் தமிழ் மாணவர்களே என்றார்.

டாக்டர் பி. பி.ஜி. ஹெவவாசம், திருவாளர்கள் லால் பிரேமானந்த் டி மெல், பி. காரியவாசம் ஆகியோர்உட்பட வேறுபலரும் பேசினர்.

## புதிய தலைவருக்கு பாராட்டு

சுழிபுரம், புதன்

பண்டத்தரிப்பு கிராம சபையின் புதிய தலைவர் பண்டிதர் இ. இராமலிங்கத்தை வரவேற்குமுகமாக பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ. மண்டபத்தில் வண. ஜீ. எம். கனகரத்தினத்தின் தலைமையில் வரவேற்புக் கூட்டமொன்று நடைபெற்றது. புதிய கிராம சபைத் தலைவரைப் பாராட்டி திருவாளர்கள் சு. அடைக்கலமுத்து. நீ ஜேம்ஸ். ஜ ரீ பீற்றர், தி வ அரியரத்தினம் ஆகியோர் பேசினர்.

## புதுவருட உத்தியோகத்தர்

குரும்பசிட்டி, புதன்

இலங்கை-சோவியத் நட்புறவுச் சங்க யாழ்ப்பாணக் கிளையின் வருடாந்த விழா சுன்னுகத்தில் நடைபெற்றபோது பின்வருவோர்நடப்புவருட புதிய உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்:

போஷகர்: சோவியத்தூதுவர் திரு எல் ஏ கொறிபின், தலைவர்: திரு வி தர்மலிங்கம் (உடுவில் எம் பி) உபதலைவர்கள்: திரு பொ நாகலிங்கம் (சுன்ஞகம் பட்டின சபைத் தலைவர்), திரு எம் சி சுப்பிரமணியம். காரியதரிசிகள்: திரு வ பொன்னம்பலம், திரு க சிவசுப்பிரமணியம், தனுதிகாரி: திரு. கே தேவராஜன். நிர்வாக சபை உறுப்பினர்: திருவாளர்கள் வி நவரத்தினம், ரி தவராஜா, எஸ் தேவகுணராஜா.

## ஐக்கிய நாணய சங்க நிர்வாகிகள்

சுழிபுரம், புதன்

சுழிபுரம் மேற்கு ஐக்கிய நாணய சங்க வருடாந்தக் கூட்டம் ஸ்ரீ கணேச வாசிகசாலை மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. இ. மாரிமுத்து தலைமையில் நடைபெற்றது. புதுவருட உத்தியோகஸ்தர் தெரிவில் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:-

தலைவர்: திரு இ மாரிமுத்து, காரியதரிசி: கா அரிச்சந்திரா, தனுதிகாரி: மு சுப்பிரமணியம், நிர்வாக சபை உறுப்பினர்களாக திருவாளர்கள் வ நாகராசா, சி கணபதியார், வ பொன்னம்பலம், வி அம்பலவாணர், ஷி செங்காரபிள்ளை, அ கனகசபை ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். தேநீர் விருந்து வைபவமும் நடைபெற்றது.

## திகதி பின்போடப்பட்டுள்ளது

பம்பலப்பிட்டி, புதன்

கொழும்பு விவேகானந்த சபையினர் நடாத்தும் அகிலஇலங்கைச் சைவசமய பாடப்பரீட்சைக்குரிய விண்ணப்பத் திகதி பின்போடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இப் பரீட்சைக்குரிய விண்ணப்பங்களை இம்மாதம் 30-ந் திகதிவரை மாணவர்கள் அனுப்பலாம்.

## "ஏற்றத்தாழ்வு ஒழியவேண்டும்"

சுன்னுகம், புதன்

''வடபகுதியில் வேரூன்றி இருக்கும் சமூக ஏற்றத்தாழ்வு இப்பகுதியிலிருந்து ஒழிந்த பின்புதான், ஒவ்வொரு தமிழ்மகனும் தன் மானத்துடன வாழமுடியும். தமிழ் சமூகத்தினிடையே நிலவிவரும் இச்சாதிப்பாகுபாடு இனியும் இருப்பது வருந்தக்கூடியதுமட்டுமல்ல வெட்கப்படவேண்டியசெயலாகும். இவ்வேற்றத்தாழ்வை அறவே நீக்குவதற்கு குறிப்பாக கிராமங்களிலுள்ள பாடசாலையில் கல்வி போதிக்கும் ஆசிரியர்கள் மாணவர்கள் மத்தியில் இது பற்றி நற்போதனைகள் செய்யவேண்டும். கிராமங்களில் பிரச்சாரங்கள் செய்யவேண்டும். இச்சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்பு வாரத்திலே சாதிப்பாகுபாட்டை ஒழித்துக்கொள்ள இத்தினத்திலே நாம் ஒற்றுமையுடன் நின்று ஒத்துழைப்போம்.''

இவ்வாறு சுன்னுகம் ... லணி சைவவித்தியாசாலை தலைமையாசிரியர் திரு மா. குமாரசாமி, மேற்படி பாடசாலையில்நடைபெற்ற சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்பு விழாவுக்கு தலைமை வகித்துப் பேசும்போது குறிப்பிட்டார்.

திரு. க. இளையதம்பி பண்டிதர் கந்தசாமி ஆகியோரும் பேசினர்.

## சிவமணி மறைவுக்கு அனுதாபம்

யாழ்ப்பாணம், வியா.

வடஇலங்கை விஸ்வகர்ம சங்கத்தினரின் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது சிவமணி கந்தையா வைத்தியநாதனின் மறைவு குறித்து அனுதாபத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது சிவமணியின் சைவத் தொண்டு குறித்து சங்கத் தலைவர் பாமாலை ஒன்றை அரங்கேற்றினுர்.

முன்னுள் வித்தியாதரிசி திரு. நாகலிங்கம், திரு. பி. சபாரத்தினம், திரு. கே. நடேசன் ஆச்சாரி உட்பட வேறுபலரும் பேசினர்.

**கரைச்சி**

## கிராமசபையின் காலஎல்லை நீடிப்பு

யாழ்ப்பாணம், வியாழன்

கரைச்சிக் கிராமசபையின் ஓர் பகுதியைப் பட்டின சபை அந்தஸ்துக்கு உயர்த்துவதை கரைச்சிக் கிராமச்சபை ஆட்சேபித்து அனுப்பிய மகஜரைத் தொடர்ந்து காங்கேசன் துறை வாடிவீட்டில் ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. மு. திருச்செல்வம், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகர், கரைச்சிக் கிராமச் சபைத் தலைவர் திரு. வி. ஆனந்தசங்கரி, ஆகியோருடனும் பட்டினசபை வேண்டுமென்ற கருத்துடைய ஓர் தூதுக்கோஷ்டியைச் சேர்ந்தஐவருடனும் பேச்சுவார்த்தை நடத்தினர்.

கரைச்சிக் கிராமசபையின் காலஎல்லையை 1967-ம் ஆண்டுமுடியும்வரைபட்டின சபையாக்குவது உசிதமில்லை என மந்திரி தெரிவித்தார். புதிய தேர்தல் நடைபெறும் போது பட்டினசபை அந்தஸ்து பற்றி யோசனை செய்வதாக மந்திரி வாக்குறுதியளித்தார்.

## பொதுக்கூட்டம்

சுழிபுரம், புதன்

மாதகல் சிகரெட் புகையிலை உற்பத்தியாளர் கூட்டுறவு ஐக்கியசங்க பொதுக் கூட்டம் சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. மா. சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. வருடாந்த அறிக்கைகளை காரியதரிசி, தனுதிகாரி ஆகியோர் சமர்ப்பித்தனர். பீடிப்புகையிலை, சிகரெட் புகையிலை நடுதல், கடன் எல்லை, புதிய கொட்டில் கட்டுதல், மேடை போடல் போன்ற விடயங்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டன.

## அமெரிக்க விமானம்: சீனு சுட்டது

பீகிங், செப். 22

சீனப் பிரதேசத்தின் மீது பறந்த அமெரிக்க விமானமொன்று சுட்டுவீழ்த்தப்பட்டதாயும், விமானி சிறைபிடிக்கப்பட்டாரென்றும் சீன பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

சீன எல்லைக்குள் இந்தியத் துருப்புக்கள் புகுந்த அதே சமயத்தில் இச்சம்பவம் நடைபெற்றதாக அது கூறியது.

## மாதாவின் திருவிழா

வேலணை, புதன்

வேலணை சாட்டி சிந்தாத்திரை மாதாவின் திருவிழா இம்மாதம் 17 ந திகதி ஆரம்பமாகியுள்ளது.

இம்மாதம் 25 ந் திகதி மாலை 7 மணிக்கும் 26 ந் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 7 மணிக்கும் பெரிய பாடல்பூசை நடைபெறும். இவ்விரு நாட்களிலும் பக்தர்களின் வசதியை முன்னிட்டு விசேஷ பஸ் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## திருத்திக் கட்ட முடிவு

பம்பலப்பிட்டி, புதன்

புதிய மருந்துக் களஞ்சிய நிலையம் ஒன்றை வெலிசறையில் கட்டுவதென்ற முந்திய திட்டத்தைச் சுகாதார அமைச்சு தற்பொழுது கைவிட்டுவிட்டதாகத் தெரியவருகிறது இதற்குப் பதிலாகக் கொழும்பிலுள்ள களஞ்சிய நிலயத்தை சிறந்த முறையில் திருத்திக் கட்டுவதென்று தீர்மானித்துள்ளது. இதைவிட எல்லா மாகாணங்களிலும் 15 பொதுக்களஞ்சிய நிலையங்கள் நிறுவப்படுமெனவும் தெரியவருகிறது,

## இன்று வருடாந்தக் கலைவிழா

யாழ்ப்பாணம், வியாழன்

மானிப்பாய் கலைக்கோவில் வருடாந்த விழாவையொட்டி லீலாம்பிகை கந்தையாவினுல் தயாரிக்கப்பட்டு கலைக்கோவில் மாணவிகளால் அளிக்கப்படும் பரதநாட்டியம் கதகளி கிராமிய நடனம் இன்று மாலை மானிப்பாய் இந்துக் கல்லூரி திறந்தவெளியரங்கில் நடைபெறவிருக்கிறது.

இவ்விழாவை கலையரசு சொர்ணலிங்கம் ஆரம்பித்து வைப்பார்.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜெயவீரா தம்பதிகளின் தலைமையில் விழா நடைபெறும்.

## இன்று பாரதிவிழா

பம்பலப்பிட்டி, புதன்

மோட்டார் போக்குவரத்து அலுவலக ஒய்வு கூடத்தில் நாளை வியாழக் கிழமை மாலை பாரதி நினைவு விழா கொண்டாடப்படவிருக்கிறது. மோட்டார் போக்குவரத்து தமிழ் கலாச்சார மன்றத்தின் ஆதரவில் நிகழவிருக்கும் இவ்விழாவில் சிங்கள மகாகவி பி. பி. அல்விஸ் பெரேராவும், செல்வி யோகா வல்லிபுரமும் சொற்பொழி வாற்றுவார்கள்.

மன்றத் தலைவர் திரு. ச. சோமசுந்தரம் விழாவிற்கு தலைமைதாங்குவார்.

## பாகிஸ்தானில்....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ரின் காரை அவர்கள் எரித்தனர்.

இது திட்டமிட்டு நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் என மேற்கு நாட்டு நிருபர்கள் அறிவித்தனர்.

**அயூப் ஆலோசனை**

இதற்கிடையில் பாகிஸ்தான் ஜனுதிபதி அயூப்கான் நாட்டின் அரசியல் கட்சித் தலைவர்களையும், அனாத் காஷ்மீர் தலைவர்களையும் சந்தித்துப் பேச்சு நடத்தியதாகத் தெரிகிறது.

சோவியத் அரசாங்கத்துக்கு பாகிஸ்தான் சமர்ப்பித்துள்ள ஒரு கடிதத்தில் பிரதமர் கோஸிஜினின் சமாதான முயற்சியைக் கொள்கையளவில் பாகிஸ்தான் ஏற்பதாய்க் கூறப்பட்டிருக்கிறது. அதே சமயம் திரு. கோஸிஜினை இந்தியத் தூதர் திரு. கவுல் சந்தித்து சீன இறுதி எச்சரிக்கை குறித்து விவாதித்தார்.

REGAL--JAFFNA
NOW SHOWING!
TONY RANDALL
IN
7 FACES OF DR. LAO
(M. G. M's Metro Color)

இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணு (திருமலை) விஜிதா (ஹட்டன்)
மொடேர்ன் (பண்டாரவளை) தீவொளி (நுவரெலியா) லக்ஷ்மி (இரத்தினபுரி)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி 2 காட்சிகள்; சனி, ஞாயிறு 4காட்சிகள்

சிவாஜி கணேசன், சாவித்திரி
எஸ். எஸ். ராஜேந்திரன், கே. ஆர். விஜயா
நடிக்கும்



கைகொடுத்த தெய்வம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'உள்ளூர் சரக்கிற்கு மதிப்பில்லை'

### நூல்அறிமுகவிழாவில் பேச்சு

உடுப்பிட்டி, புதன்

"சிம்மாசனம் அழியும். ஆனால் கவிதை அழியாது, நலிவுற்ற சமூகத்தில் பிறந்த கவிஞன் அந்தச் சமூகத்தின் குறைபாட்டைப் பிரதிபலிக்கக் கூடியதாகக் கவிதை இயற்றுவானாகில் அவன்தான் உண்மைக் கவிஞனுக்கு இலக்கணமாவான். பாரதி உள்ளவரையில் அவரைப் பழித்தவர்கள் அவர் இறந்த பின்னர்தான் போற்றுகிறார்கள். கவிஞர் பசுபதியும் தான் உயிரோடு இருக்கும் வரையில் புகழ் பெறவில்லை. இறந்தபிறகுதான் அவரைத் தமிழ் மக்கள் உணர்கிறார்கள். கவிஞர் பசுபதியின் நினைவைக் கொண்டாடுவதன் மூலம் கவிஞர்களிடையே ஒற்றுமை மனப்பான்மையை ஏற்படுத்த முனைந்த விழாக் குழுவினருக்கு எனது பாராட்டுதல்கள்" இவ்வாறு வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற 'புது உலகம்' பசுபதி கவிதைகள் அறிமுக விழாவில் மேற்படி கல்லூரி அதிபர் திரு. எம். எஸ். சீனித்தம்பி பேசுகையில் கூறினார்.

கவிஞர் திரு. மு. செல்லையா பேசுகையில், "நலிவுற்ற சமூகத்திற்காகவும் ஏழைகளுக்காகவும் பாட்டாளி வர்க்கத்திற்காகவும் பாடிப் பொருளாதார ஸ்திரம் பெற்ற புதிய உலகத்தைக் அமைக்க வேண்டும் என்ற தீராத ஆவல் கொண்டிருந்தவர் பசுபதி. கைதடி குருடர் செவிடர் பாடசாலையில் ஆசிரியராகக் கடமை ஆற்றிய போது பொறுமையுடனும் அன்புடனும் அவர் ஆற்றிய பணிகள் பல.

திரு. வேல்மாறன் பேசுகையில், "உள்ளூர்ச்சரக்குகளுக்கு மதிப்புக் கொடுக்க நம்மவர்கள் தயங்குகிறார்கள். வெளியூர்களில் இருந்து கலைஞர்களும் கவிஞர்களும் வருகிறார்களென்றால் மேளதாளங்களுடன் அவர்களை வரவேற்க ஆர்ப்பரித்து நிற்பார்கள். இலங்கையில் எந்தத் திறமைசாலியையும் போற்றத் தயங்குவார்கள். இது தமிழ் மகனுக்குள்ளதோர் இழிநிலை. இந்நிலை உடனடியாக மாற்றப் படவேண்டும்.

திரு. கார்த்திகேசன் பேசுகையில், "ஆங்கிலக்கவி சேக்ஸ்பியரைக் கவிஞர் பசுபதி அதிகம் அறிந்திருக்க நியாயமில்லை. ஆனாலும் அவரது கவிதைகள் பல சோக்ஸ்பியரின் கவிதைகளின் கருத்துக்களை ஏத்திருக்கின்றன. தமிழர்களுக்குள் ஒரு சேக்ஸ்பியர் பசுபதி என்றார்.

திருவாளர்கள் கே. டானியல், குமாரசாமி ஆகியோருட்படப் பலர் பேசினர். இவ்வைபவத்திற்கு ஆசிரியர் திரு. வ. மகாலிங்கம் தலைமை வகித்தார்.

## ஸ்தலஸ்தாபன தொழிலாளர்சங்கம்

பருத்தித்துறை, புதன்

ஐக்கியஇலங்கை ஸ்தலஸ்தாபன தொழிலாளர் சங்கப் பருத்தித்துறை மாவட்டக் கிளைக்கூட்டம் தொழிலாளர் வாசிகசாலையில் திரு. கு. நாகன் தலைமையில் நடைபெற்றது.

தாய்ச்சங்கக் காரியதரிசி ஆர். செல்லையா பேசும் போது ஸ்தலஸ்தாபனத் தொழிலாளர்களுக்கும் அரசாங்கத் தொழிலாளர்களுக்குள்ள சகல சலுகைகளும் கிடைக்கவேண்டுமானால் அகிலஇலங்கை ரீதியாக ஒரு வேலைநிறுத்தத்தை ஸ்தலஸ்தாபனத் தொழிலாளர்கள் செய்யவேண்டுமெனக் கூறினார்.

கே. மாணிக்கம், மா. குருபாதம், நா. கோவிந்தன், தை. ஆரோக்கியம் ஆகியோரும் பேசியபின் பருத்தித்துறை நகரசபைக்கு அனுப்புவதற்கென ஐந்து **கோரிக்கைகள்** தீர்மானிக்கப்பட்டதுடன் ஒரு மாதகால எல்லையில் கோரிக்கை நிறைவேற்றப் படாவிடில் வேலைநிறுத்தம் ஒன்றை மேற்கொள்வதெனவும் முடிவுசெய்யப் பட்டது.

## 3 மாதங்களில் மொழியைக் கற்றனர்

பெர்லின், செப். 22

ஆசிய, ஆபிரிக்க, தென் அமெரிக்க நாடுகளைச் சேர்ந்த 65 மாணவர்கள் ஜெர்மன் ஜனநாயக்குடியரசில் மத்திய ஜெர்மன் மொழிக் கல்லூரியில் 3 மாதப் பாடத் திட்டத்தின் கீழ் ஜெர்மன் மொழியைக் கற்று பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். அடுத்து அவர்கள் இங்கு கைத்தொழிற்துறையில் பயிற்சி அளிக்கப்படுவார்கள். இக் கல்லூரி தொடங்கி 4 வருடங்களில் 43 நாடுகளைச் சேர்ந்த சுமார் 700 பேர் இங்கு ஜெர்மன் மொழியைக்கற்று வெளியேறியுள்ளனர்.

## இசையரங்கு

யாழ்ப்பாணம், புதன்

பரமேஸ்வராக் கல்லூரி பதினொன்காவது ஆண்டு நவராத்திரி இசையரங்கு இம்மாதம் 25ந் தேதி சனிக்கிழமை ஆரம்பமாகி அக்டோபர் 3ந் தேதியுடன் முடிவடையும்.

ஒவ்வொரு தினமும் மாலை 7 மணிதொடக்கம் இசை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

## வானொலி

### கொழும்பு

### வியாழன் 23-9-65

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00).

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தேர்ந்தஇசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 விமர்சனம், 7-15 வயலின், 7-45 நாடகம் 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 வாத்தியஇசை, 9-30 நேயர் விருப்பம், 10-00 நிலையஒலிப் பதிவுகள்.

## மாணவர்களுக்கு பாராட்டு

பருத்தித்துறை, புதன்

மருதங்கேணி ஆழியவளை அரசினர் தமிழ்ப்பாடசாலையின்வருடாந்தவிளையாட்டுப் போட்டி திரு. சு. இராமசாமிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

முன்னாள் ஆசிரியர் வடிவேலு பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

விளையாட்டுத்துறைகளில் வடமராட்சி கிழக்குப் பகுதி சென்ற காலங்களில் ஆர்வம் காட்டியதில்லை. இவ்வருடம் இவ்விளையாட்டுப் போட்டியில் மாணவர்கள் ஆர்வம் காட்டியதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம். பட்டினத்திலுள்ளவர்கள் மாத்திரம்தான் விளையாட்டுப் போட்டிகள் நடத்தி பேரும் புகழும் பெற்றுவந்தனர். வருங்காலத்தில் பின்தங்கிய கிராமங்கள் சமத்துவமாக நடந்துகொள்ள இப்போட்டி வழிவகுத்துள்ளது.

வெற்றிவீரர்களுக்கு அமைச்சர் திருச்செல்வம் பரிசில்களை வழங்கினார்.

## தொண்டர்படையும் சமாதானசபையும்

பருத்தித்துறை, புதன்

புலோலி மேற்குக் கிராம முன்னேற்றச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் வடமராட்சிப் பகுதிக் காரியாதிகாரி திரு. ஏ. சி. விசுவநாதன் தலைமையில் நடைபெற்றபோது பத்துப்பேர் அடங்கிய தொண்டர்படையொன்று தெரிவுசெய்யப்பட்டதுடன் ஐந்து பேர் கொண்ட சமாதான சபை ஒன்றும் தெரிவுசெய்யப் பட்டது.

காரியாதிகாரி தொண்டர் படையினரதும், சமாதான சபையினரதும் கடமைகள் பற்றி எடுத்துக்கூறியதுடன் கிராமத்தின் ஐக்கியத்திற்கும், சுபீட்சத்திற்கும் இவை இன்றியமையாதனவை எனவும் தெரிவித்தார்.

ஆசிரியர் திரு. வ. சபாபதிப்பிள்ளை 'கந்தபுராண ... வாழ்வும்' என்ற தலைப்பில் உரைநிகழ்த்தினர்.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

ஆனைக்கோட்டை 3-ம் கட்டையில் 5 பரப்புக்காணி மானிப்பாய் வீதியில் இருக்கிறது. விபரங்களுக்கு: பாலக்குமாரன் பிறக்டர், 440, காங்கேசன்துறை வீதியில் தொடர்புகொள்ளவும். 1061

யாழ்ப்பாணத்தில்- சிறந்த அயலில், சகல வசதிகளுடன் எட்டுப்பரப்புக்காணி விற்பனைக்கு இருக்கிறது. ஒரு பரப்பின் விலை-ஐயாயிரம். பாகுபாடின்றி எவரும் வாங்கலாம். அரைவாசியும் கிடைக்கும். மனுச்செய்க:- விளம்பர இல. 1052, ஈழநாடு மேர்ப்பார்த்து, யாழ்ப்பாணம். 1052

எம்மிடம் பலரக முந்திரிகைச் செடிகள் விற்பனைக்குண்டு. செமிலோன் சிகப்பு, இசைப்பிலா வெள்ளை, அவுஸ்திரேலியன் விருட்டி ஆகிய ரகங்கள் உண்டு. சி. சபாரெத்தினம், 20, சர்பத்கடை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1048

சரித்திரபாட வழிகாட்டி வினா—விடை G. C. E. வகுப்பு. 1965 புதிய பாடத் திட்டத்திற்கு அமைய எழுதிய சரித்திரபாட வழிகாட்டி வினா—விடை. விலை: 3-50. ஸ்ரீகாந்தா அச்சகம், 213, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 1057

3 சிறி 6000 தொடர் வரிசையிலுள்ள ரயம்ப் ரைகிறஸ் ஸ்பீட்ருவின் (Triump Tigeress Speedtwin) மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: எஸ் குமார், உடுவில் ரோட், மானிப்பாய். 1059

### தேவை

யாழ்ப்பாணத்தில் தொழில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஓர் அச்சுயந்திர ஸ்தாபனத்திற்கு 50 வயதிற்கு மேற்பட்டவராகவும், கணக்கு எழுதக்கூடியவராகவும், தொழிலை நன்கு நிர்வகிக்கக்கூடிய ஆற்றல் உள்ளவராகவும், தமிழ் ஆங்கிலம் தெரிந்தவராகவும் பிணைப் பணம் செலுத்தக் கூடியவராகவும் ஓர் மனேஜர் தேவை. விபரங்களுக்கு நேரில். ஆசிரியை, இல. 4, குமாரவீதி, முத்திரைச் சந்தையடி, நல்லூர், யாழ்ப்பாணம். 1054

விற்பனையாளர்களாகக் கடமை புரிவதற்குப் பெண்கள் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். தி நாஷனல் சேல்ஸ் கோப்பரேசன், 1/3 மின்சார நிலைய வீதி, கனிபா கட்டிடம், யாழ்ப்பாணம், 1060

### கல்வி

எங்கள் ஜி. சி. இ. சாதாரணம் கலை/ விஞ்ஞானம்/ வர்த்தக வகுப்புகளில் சில இடங்களே காலியாக உள்ளது. தாமதிக்காமல் சேருங்கள். யுனைட்டெட் இன்ஸ்ரிரியூற்ஸ், நெல்லியடி/ 107, பருத்தித்துறை, வீதி நல்லூர், யாழ்ப்பாணம். 967

### வைத்தியம்

**தொய்வு, க்ஷசம், நீரிழிவு, கிரந்தி** முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனம். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## 'பாரதியை பின்பற்றுக'

இளவாலை, புதன்

"பாரதி காட்டிய இலகு தமிழ், இன்றைய ஆசிரிய உலகுக்கு ஓர் எடுத்துக்காட்டு. மாணவர், தம் ஆற்றலைப் புரிந்து கல்விபோதிப்பது மிக அவசியம். பாரதியின் சகாப்தத்துடன் மலர்ந்த இலகுநடையை ஆசிரியர்கள் கைக்கொண்டு கல்வி போதித்தல் அவசியமென்பதைப் பலரும் உணருகின்றனர்."

இவ்வாறு இளவாலை அர்ச். ஹென்றி அரசர் கல்லூரியில் நடைபெற்ற பாரதி விழாவில் சிறப்புப் பேச்சாளராகக் கலந்துகொண்ட வட்டார வித்தியாதரிசி திரு. சிவகுரு குறிப்பிட்டார்.

தமிழ் மன்றத் தலைவர் திரு. நீ. யோசெப் மரியநாயகம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. வை. நாகராஜன், வித்துவான் கூ. அடைக்கலமுத்து, திருமதி எம். துரையப்பா ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்.

## திரு. லோகநாதனுக்கு அழைப்பு

பம்பலப்பிட்டி, புதன்

பெர்லின் செனற்சபையினர் இலங்கைவங்கி ஜெனரல் மனேஜர் திரு. சி. லோகநாதனை ஜெர்மன் பொருளாதார தினத்தின் போது சொற்பொழிவாற்றும்படி அழைத்துள்ளனர்.

பெர்லினில் விசேஷ நிகழ்ச்சியாக நடைபெறும் இப்பொருளாதார தினத்தில் பல நாடுகள் கலந்துகொள்கின்றன. இன்று ஆரம்பமாகும் இவ்விழா அக்டோபர் 3ந் தேதிவரை நடைபெறும்.

## சமூகஏற்றத்தாழ்வு ஒழிப்புக் கூட்டம்

பருத்தித்துறை, புதன்

சமூக சீர்திருத்த வாரத்தை யொட்டிய பகிரங்கக் கூட்டங்கள் நாளை வியாழக்கிழமை வடமராட்சிப் பகுதியில் நடைபெறவிருக்கின்றன.

உடுப்பிட்டித் தொகுதிக்கான கூட்டம் கட்டைவேலி மெ. மி. பாடசாலையிலும் பருத்தித்துறைத் தொகுதிக்கான கூட்டம் இம்பருட்டிக் கடற்கரை மைதானத்திலும் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இருதொகுதிகளிலும் அவ்வப் பாராளுமன்ற உறுப்பினர்களும் மகாண அதிபர், காரியாதிகாரி யாகியோரும் பிரதம பேச்சாளர்களாகக் கலந்துகொள்வார்கள்,

## கிளிநொச்சிக்கு பட்டின சபை

யாழ்ப்பாணம், புதன்

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் செயற்குழு பொதுச்சபை ஆகியவற்றின் கூட்டத்தில் கிளிநொச்சியில் ஒரு பட்டினசபையை விரைவில் நிறுவவேண்டுமென்றும் இதற்கான நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டும் என்று ஸ்தலஸ்தாபன மந்திரியை கேட்டுக்கொள்வதென கூட்டத்தில் பல உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளதாகத் தெரியவருகிறது.

ஏற்கனவே குறிப்பிட்ட பிரசுரம் 1966-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் பட்டின சபை நடைமுறைக்குவர வேண்டுமென்று கூட்டத்தில் அபிப்பிராயம் தெரிவிக்கப் பட்டது.


வேலணை

சாட்டி சிந்தாத்திரை மாதாவின் திருவிழா

இம்மாதம் 17-ம் திகதி வெள்ளிக்கிழமை முதல் 26-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரையில்

**சனிக்கிழமை 25-ம் திகதி மாலை 7 மணிக்கும்**
**ஞாயிற்றுக்கிழமை 26-ம் திகதி காலை 7 மணிக்கும்**

பெரிய பாடல் பூசை நடைபெறும்

இவ்விரு நாட்களிலும் பக்தர்களின் வசதியை முன்னிட்டு விஷேச பஸ் சேவை நடைபெறும்.

பங்கு குரவர்
சாட்டி, வேலணை.

867



தேவை

சுவெப்ஸ் குளிர்பானங்கள் வழங்குவதற்கு உதவி விநியோகஸ்தர்கள் (SUB-AGENTS) பின்வரும் இடங்களுக்குத் தேவை:-

சுன்னாகம், காங்கேசன்துறை, அச்சுவேலி, காரைநகர், வட்டுக்கோட்டை, மானிப்பாய், சங்கானை, தீவுப்பகுதி, சாவகச்சேரி, கொடிகாமம், பளை, கிளிநொச்சி, மாங்குளம்.

விண்ணப்பிக்க வேண்டிய விலாசம்:

நந்தி இன்டஸ்றீஸ் அன்ட் ஏஜென்சீஸ் லிமிட்டெட்
20, ஸ்டான்லி ரோட், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஐ. நா. உத்தரவை இந்தியா ஏற்றது பாகிஸ்தானின் முடிவு தெரிவிக்கப்படவில்லை

## லாகூர், சியால்கோட் முனைகளில் தொடர்ந்தும் சண்டை

வாஷிங்டன், செப். 21

இலங்கை நேரப்படி புதன்கிழமை நண்பகல் 12-30 மணிக்கிடையில் பாகிஸ்தானும் இந்தியாவும் தம்மிடையே நடைபெறும் சண்டையை நிறுத்தவேண்டுமென்ற ஐ. நா. பாதுகாப்பு சபையின் உத்தரவை இந்தியா ஏற்றுக்கொண்டுள்ளது. பாகிஸ்தானின் பதில் இன்னும் ஐ. நா.வுக்கு கிடைக்கவில்லை. பாகிஸ்தானின் பதிலை தெரிவிப்பதற்காக அரசாங்கத்தின் சார்பில் வெளிவிவகார மந்திரி ஜனுப் அலி புட்டோ நியுயோர்க்குக்கு விரைகிறார்.

இது இவ்வாறிருக்க இந்தியாவும் பாகிஸ்தானும் தொடர்ந்து சண்டையிலீடுபட்டுக் கொண்டிருக்கின்றன. லாகூரில் பாகிஸ்தானுக்குள் தாம் முன்னேறியிருப்பதாகவும், பார்மோர் அரங்கில் புதிய கிராமம் ஒன்றை தம்வசமாக்கியுள்ளதாகவும் இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன. அம்பாலா, ஜோத்பூர் ஆகிய இடங்களில் தமது விமானப்படை தாக்குதல் நடத்தி பெருஞ்சேதம் விளைவித்ததாகவும், லாகூர் சண்டையில் எதிரி விமானம் ஒன்றை சுட்டுவீழ்த்தியதாகவும் பாகிஸ்தான் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. சியால்கோட், லாகூர் முனைகளில் தொடர்ந்து கடும் சண்டை நடைபெறுகிறது.

இந்தியாவும் பாகிஸ்தானும் புதன்கிழமை நண்பகல் 12-30 மணிக்கிடையில் தமது சண்டையை நிறுத்திக்கொள்ளவேண்டும் என்ற அவகாசத்துடன் ஐ. நா. பாதுகாப்பு சபை ஒரு தீர்மானத்தின் மூலம் இரு நாடுகளையும் கேட்டிருந்தது இதைத்தொடர்ந்து இரு நாட்டு மந்திரிசபைகளும் இதைப்பற்றி விவாதித்தன. இந்தியா தான் ஏற்றுக் கொள்வதாக தெரிவித்துள்ளது. இந்தியப் பிரதமர் திரு லால்பகதூர் சாஸ்திரி திரு யுதாண்டுக்கு அனுப்பிய பதிலில் தாம் பாதுகாப்பு சபையின் உத்தரவை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்திருக்கிறார்.

தாம் ஐ. நா.வுக்கு அனுப்பிய பதில் பற்றி இன்று இந்தியப் பார்லிமெண்டில் திரு. சாஸ்திரி அறிக்கை வெளியிடவிருந்தார் எனினும் நாளைய தினமே வெளியிடுவார் என அறிவிக்கப்படுகிறது.

இரு நாடுகளும் சண்டை நிறுத்தத்துக்கு ஒப்புக் கொண்டால் அதன் பின்னர் பிரச்னையை நிரந்தரமாகத் தீர்ப்பதற்கு வழிவகை செய்யமுடியும் என பாதுகாப்புசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

---

### ஸ்புட்னிக் கழகம் வெற்றியீட்டியது

யாழ்ப்பாணம், புதன்

நல்லூர் ஸ்புட்னிக் கழகத்திற்கும், சண்டிருப்பாய் கலைவாணி சழகத்தினருக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் 'ஏ' பிரிவில் 2-1 கோல்களினலும், 'பி' பிரிவில் 4-0 கோல்களினலும் ஸ்புட்னிக் கழகம் வெற்றியீட்டியது.

---

## காரியாதிகாரி கூட்டும் மகாநாடு

படுத்தித்துறை, செவ்.

வடமராட்சிப் பகுதியில் எதிர்வரும் நிதிவருடத்தில் சிரமதானமுறையில் செய்து முடிக்கக்கூடிய பொதுவேலைகள்பற்றி ஆராயவும் அவற்றிற்கான திட்டமொன்றை வகுப்பதற்காகவும் வடமராட்சிப்பகுதிக் காரியாதிகாரி திரு. ஏ. சி. விசுவநாதன் இம்மாதம் 25 ம் திகதியன்று மகாநாடொன்றைக் கூட்டவிருக்கின்றார்.

சனசமூக, கிராம முன்னேற்றச் சங்கப் பிரதிநிதிகள், பாடசாலைத் தலைவர்கள், பொதுஸ்தாபனத் தலைவர்கள், தொண்டர்கள், கிராமசேவகர்கள் முதலான பலர் இம்மகாநாட்டிற்கு அழைக்கப்படுவார்கள் எனத் தெரியவருகிறது.

---

## ஏழாலை கிராமசபை கேள்வி விளம்பரம்

1. ஒப்பந்தவேலை:-ஏழாலை கிராமசபை காரியாலயம் அமைத்தல்.
2. கேள்விப்பத்திரம் கொடுத்தல்: - 25-9-65 பி. ப. 1 மணி வரை.
3. தகுதி: - (I) பதிவு பெற்ற தகுதியான ஒப்பந்தக்காரர்.
(II) கேள்விப் பத்திரப் பணம் 50/-.
(III) பத்திரக் கட்டுப் பணம் 5/-.
4. விபரம் அறிதல்: -
(I) வடபகுதி உ. உ. அதிபர் காரியாலயம்.
(II) ஏழாலை கிராம சபைக் காரியாலயம்.

சி செல்வநாயகம்,
அக்கிராசனர்,
கி. ச. ஏழாலை.

871

---

### தவறிவிட்டது

M784976 இலக்கமுடைய கூப்பன் புத்தகம் நேற்று (21-9-65) கச்சேரியடியிலோ அல்லது கச்சேரி பஸ்ஸிலோ தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 'ஈழநாடு' காரியாலயத்திலோ அல்லது க. சுப்பிரமணியம், 44/6 லோட்டஸ் ரோட், வண்ணை [illegible] தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். 1058

---

**சிக்கிம் எல்லையில்**

# சீன இந்தியதுருப்புகள் பரஸ்பரம் சுடுபட்டன

லண்டன், செப். 21

**சிக்கிம் எல்லையில் சீன - இந்தியத் துருப்புக்கள் இன்று பரஸ்பரம் திருப்பிச் சுடுபட்டதாகச் செய்திகள் கிடைத்துள்ளன. இமாலயப் பகுதியில் இந்தியத் துருப்புகள் மீது முதலில் சீன சுட்டதாகவும் அதைத் தொடர்ந்து தமது துருப்புகள் சுட்டதாகவும் இந்திய வானொலி தெரிவித்தது. சில மணி நேரங்களின் பின் சீனத் துருப்புகள் சுடுவதை நிறுத்திவிட்டதாகவும் அச்செய்தி தெரிவித்தது.**

இதைவிட லடாக்கின் மேற்குப் பகுதியிலும் சிக்கிமிலுமாக சிக்கிம் - திபெத் எல்லையில் ஐந்து இடங்களில் சீனத் துருப்புகள் சுட்டதாகவும் தாம் அதற்குப் பதில் சுடவில்லை எனவும் இந்திய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

இந்தியத் துருப்புக்கள் சிக்கிம் எல்லையில் திபேத்துக்குள் 4 கிலோ மீட்டர் ஊடுருவல் செய்ததாகக் கூறுவது பொய்க் குற்றச்சாட்டு என இந்தியப் பிரதமர் மறுத்தார்.

---

# 'நிறத்துவேஷத்தை எதிர்க்கும்நாம் சாதி வேற்றுமை காட்டலாமா?'

குரும்பசிட்டி, செவ்.

"மேலைத்தேச நாடுகளில் கறுப்புஇன மக்களுக்கு உரிமைகள் வழங்க மறுக்கப்படுவதை மனிததர்ம நீதிக்கு முரணனதென ஆசிய-ஆபிரிக்க நாடுகள் குரல் எழுப்புகின்றன. ஆனல் அதே ஆசிய-ஆபிரிக்க நாடுகளில் ஒன்ருக அங்கம்வகிக்கும் நமது நாட்டில் கறுப்பு நிறத்தவரான நாமே நமக்கிடையே சாதிவேற்றுமையைக் கொண்டிருப்பது கண்ணுடிவீட்டுக்காரன் கல்லெறிவது போன்றதாகவுள்ளது. ரிச்சீர்கேடான நிலையைப் போக்கி, சமத்துவ சமுதாயத்தை அமைக்க மக்களனைவரும் குறிப்பாகப் படித்த வாலிபர்கள் முன்வரவேண்டும். உலகிலேயுள்ள நோய்கள் மனித வர்க்கம் முழுவதுக்கும் பொதுவானவை. அத்துடன் அவற்றைத் தீர்க்க உதவும் மருந்துவகைகளும் கூடப் பொதுவானவையே. எனவே விஞ்ஞானரீதியில் நோக்கும்போது சாதிவேற்றுமை தவறனதும், பிற்போக்கானதுமென்பது தெளிவு."

மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவிகள் மத்தியில் 'சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்பு' எனனும் பொருள்பற்றித் திரு. வி. பொன்னம்பலம் பேசும்போது மேற்கண்டவாறு கூறினர். திங்கட்கிழமையன்று கல்லூரி அதிபர் திருமதி பி. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற இந்தச்சொற்பொழிவின்போது திரு. பொன்னம்பலம் மேலும் கூறியதாவது:

"இன்று வறுமையால் வாடி, குடும்ப வாழ்வை நடத்துவதற்குப் போராடிக்கொண்டிருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களே இரத்ததானம் செய்கின்றனர். ஆஸ்பத்திரிகளில் உயிருக்காகப் போராடிக்கொண்டிருக்கும் உயர்சாதி மக்களுக்கு உயிரப்பிச்சையளிக்க மட்டும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு உரிமையும், கடமையும் உண்டென்ருல் சமுதாயத்தில் சமத்துவமாக உரிமைகள்பெற்று வாழ ஏன் அனுமதிக்கப்படுவதில்லை."

---

## தடைசெய்க

ஜெனிவா, செப். 22

"அணுஆயுதங்களை தடைசெய்ய வேண்டுமென்றும், அணுகுண்டு சோதனையைத் தடைசெய்யும் மாஸ்கோ ஒப்பந்தம் பூமிக்கடியில் செய்யப்படும் அணுகுண்டு சோதனையைத் தடுப்பதற்காக விஸ்தரிக்கப்படவேண்டுமென்றும் ஜேர்மன் ஜனநாயகக்குடியரசு ஐ. நா. படைக்குறைப்புக் குழுவை வற்புறுத்தியுள்ளது" என்று ஜேர்மன் ஜனநாயகக் குடியரசின் உதவி வெளிவிவகார மந்திரி திரு. ஜோர்ஜ் ஸ்டிபி ஜெனிவாவில் பிரெஞ்சு செய்திஸ்தாபனமொன்றுக்கு அளித்த பேட்டியின்போது கூறினர்.

---

# சிறுகதை, கவிதைப் போட்டி

## சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்பு வாரத்தையொட்டி ஈழநாடு

அளிக்கும் வாய்ப்பு

19-9-65-முதல் 25-9-65 வரை நடைபெறும் சமூகஏ் ஏற்றத்தாழ்வு ஒழிப்பு வாரத்தின் ஓர் அங்கமாக சிறுகதை, கவிதைப் போட்டியை நடத்துவதற்கு சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்பு வாரக்குழு ஒழுங்குசெய்துள்ளது.

### நிபந்தனைகள்

(1) இப்போட்டிக்கு அனுப்பப்படும் சிறுகதைகளும், கவிதைகளும் சமூகத்தில் வித்தியாசத்தால் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளை ஒழிக்கும் கருத்துடையனவாக இருக்கவேண்டும்.

(2) போட்டிக்குரிய கதைகளும், கவிதைகளும் 24-9-65-ந் திகதிக்கு முன்னர் சிறுகதை, கவிதைப் போட்டி, ஆசிரியர், ஈழநாடு, த. பெ. எண் 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்.

(3) இப்போட்டியின் முடிவு சம்பந்தமாக ஈழநாடு ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.

(4) சிறுகதையும், கவிதையும் தனிப்பட்ட எவரையும் தாக்குவதாக இருக்கக்கூடாது

### பரிசுகள்

பரிசுக்குரிய சிறுகதைக்கு 50 ரூபாய் பெறுமதியான தமிழ் நூல்களும், பரிசுக்குரிய கவிதைக்கு 50 ரூபாய் பெறுமதியான தமிழ் நூல்களும் வழங்கப்படும்.

போட்டியில் தெரிவுசெய்யப்படும் முதல் மூன்று சிறுகதைகளும், கவிதைகளும் ஈழநாடு வாரப்பதிப்பில் பிரசுரிக்கப்படும்.

இப்போட்டியில் கலந்துகொள்ள விரும்புவோர் பின்வரும் கூப்பனை நிரப்பி தாம் அனுப்பும் சிறுகதை, கவிதையுடன் அனுப்பவேண்டும்.

> சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்பு
>
> **சிறுகதை, கவிதைப் போட்டி**
>
> பெயர்: ____________________
>
> விலாசம்; ____________________
>
> கதை / கவிதை (தலைப்பு)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org